*கவனிக்க.- 2019.06.21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2130 - 2019 ජූනි මස 28 වැනි සිකුරාදා - 2019.06.28

*2130 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1176 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1176 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 1179 |


### வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2019, யூலை மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, யூலை மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1175 - B81537 - 5,403 (2019/ 06)

## பதவிகள் - வெற்றிடம்

திருத்தம்

**அக்மீமன பிரதேச சபை**

*2019.04.18 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலக்கம் 2119 உடைய வர்த்தமானப் பத்திரிகையில் IV(ஆ) பகுதியில் பதவி - வெற்றிடத்தின் கீழ் 04 - 806 அறிவிப்பில் 03 மற்றும் 07 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்பட வேண்டி உள்ளது :-*

*03. பொது தகுதி :*

*சாரதிப் பதவிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர், தெ.மா.அ.சே கனிஷ்ட சேவை ஆரம்ப தேர்ச்சி பெற்ற சேவைக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைப் படி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் என்றும், விண்ணப்பப்பத்திரம் கோரும் இறுதித் திகதிக்கு தென் மாகாண சபை அதிகாரப் பிரதேசத்தில் அண்மித்த 05 வருடங்களும்,தொடரான 03 வருடங்களும் பதிவை உறுதி செய்ய வேண்டும்.*

*07. புள்ளி பெற்றுக் கொடுக்கும் முறை*

*ஆரம்ப மட்ட பகுதி தேர்ச்சிபெற்ற சேவை வகை மற்றும் ஆரம்ப மட்ட பகுதி தேர்ச்சி அற்ற சேவை வகைக்காக ஆட்சேர்ப்பு கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக்காக புள்ளி பெற்றுக்கொடுக்கும் துறை மற்றும் அளவு தென் மாகாண அரசாங்க சேவையில் உள்ளூராட்சிமன்ற அலுவலகத்திக்கு உட்பட்ட கனிஷ்ட சேவையில் ஆரம்ப தேர்ச்சி மட்ட, ஆரம்ப தேர்ச்சியற்ற சேவை ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் இணைப்பு 01 இல் குறிப்பிட்டவாறு ஆகும். ஆரம்ப மட்ட தேர்ச்சிபெற்ற சேவை வகைக்காக புள்ளி பெற்றுக் கொடுக்கும் வர்த்தமானப் பத்திரிகை அறிவிப்பில் 07.01 இன் கீழ் காட்டப்பட்ட முறையாகும்.*

*இந்த வர்த்தமானி அறிவிப்பில் 2019.05.06 வரை கிடைக்கப் பெற்றிருக்கும் விண்ணப்பப்பத்திரங்களுக்கு மேலதிகமாக இந்த வரத்தமானி அறிவீப்பு பிரசுரிக்கும் திகதியிலிருந்து 2019.07.01 ஆந் திகதி வரை கிடைக்கும் விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் என்று அறிவிக்கின்றேன்.*

*சமரசேன கலஹேவத்தை,*
*தவிசாளர்,*
*அக்மீமன பிரதேச சபை.*

*06 - 949*

---

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**நோர்வூட் பிரதேச சபை**

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (சம்மதிக்கப்பட்ட துணை விதி) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி நிறுவன (அனுமதி பெற்ற துணை விதி) 6 ஆவது சட்டத்தின் (3) ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி 2019 ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி நடைபெற்ற நோர்வூட் பிரதேச சபையின் சபைக் கூட்டத்தின் மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றேன்.*

*கே. கே. ரவி,*
*தவிசாளர்,*
*நோர்வூட் பிரதேச சபை.*

*நோர்வூட் பிரதேச சபை அலுவலகம்,*
*புளியாவத்தை*
*2019, யூன் 12.*

## 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (சம்மதிக்கப்பட்ட துணை விதி) சட்டம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (கட்டளைச் சட்டம்) சட்டத்தின் பிரிவு 02 (1) ஆம் உப பிரிவின் (அ) பந்தியில் கூறப்பட்டுள்ள 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி நிறுவன (அனுமதி பெற்ற துணை விதி) 6 ஆவது சட்டத்தின் (2) ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மத்திய மாகாண உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சரால் குறிப்பிடப்பட்டுள்ள 2016.02.23 ஆந் திகதிய 1955/7 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலின் படி மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் மூலம் 2017.02.21 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட 2017.05.05 ஆந் திகதிய 2017/42 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் IV(அ) பிரிவில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலின் படி கீழ்வரும் துணை விதிகளை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடும் திகதியில் இருந்து ஏற்றுக்கொண்டு நோர்வூட் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு மேற்குறிப்பிட்ட 261 ஆவது அதிகாரமான 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி நிறுவன (அனுமதி பெற்ற துணை விதி) 6 ஆவது சட்டத்தின் (3) ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் பிரதேச சபையின் மூலம் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.*

1. பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டிடங்கள் அமைப்பதற்கான அமைப்பு பரிசீலனை செய்தல் மற்றும் கட்டணம் அறவிடுவதற்கான துணை விதி (நகர அபிவிருத்தி அதிகார சபை எல்லைக்கு வெளியில்)
2. சேவைகளுக்கான கட்டணம் அறவிடுவது சம்பந்தமான துணை விதி
3. பொது நூலகம் சம்பந்தமான துணை விதி
4. தகனம் செய்யும் சம்பந்தமான துணை விதி
5. வரி அறவிடல் செயற்பாட்டிற்காக கால அறிக்கை மற்றும் தகவல்கள் பெற்றுக்கொள்வதற்கான துணை விதி
6. அழுத்தமான வியாபாரம் மற்றும் அபாயகரமான வியாபாரம் சம்பந்தமான துணை விதி
7. மீன் விற்பனை சம்பந்தமான துணை விதி
8. பிரதேச சபை சந்தை சம்பந்தமான துணை விதி
9. அலங்கார மேம்பாடு சம்பந்தமான துணை விதி
10. பொது மலசலக்கூட பாவனை முறைமைப்படுத்தல் சம்பந்தமான துணை விதி
11. பிரச்சார அறிவிப்புக்கள் சம்பந்தமான துணை விதி
12. விலங்குப் பண்ணைகள் கட்டுப்பாடு மற்றும் முறைமைப்படுத்துதல் சம்பந்தமான துணை விதி
13. இறைச்சி விற்பனை சம்பந்தமான துணை விதி
14. தனியார் கல்வி நிலையங்கள் சம்பந்தமான துணை விதி
15. மாடு வெட்டுமிடம் சம்பந்தமான துணை விதி
16. பிரதேச சபைத் தெருக்களில் செல்லும் வாகனங்களது பாரம் மற்றும் வேக கட்டுப்பாடு சம்பந்தமான துணை விதி
17. முச்சக்கர வண்டி நிறுத்துமிடம் சம்பந்தமான துணை விதி
18. சுற்றுலாத்துறை சம்பந்தமான துணை விதி
19. தனியார் வாகனம் நிறுத்துமிடம் சம்பந்தமான துணை விதி

*06- 935*

## நாத்தாண்டிய பிரதேச சபை

*2019.07.01 தொடக்கம் 2019.12.31 வரையிலான காலத்திற்காக திண்மக் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான கட்டணம் அறவிடல் - 2019*

*நாத்தாண்டிய பிரதேச சபையினால் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தின் 05 - V தீர்மான இலக்கத்தினால் கீழ்க் காட்டப்பட்டுள்ள தீர்மானத்தினை சபை ஏற்றுக் கொண்டது பற்றி பொது மக்களுக்கு இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

ரொசான் நிலந்த பிரனாந்து,
தவிசாளர்,
நாத்தாண்டிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
நாத்தாண்டிய,
2019, மே 31.

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 93 ஆம் பிரிவு மற்றும் 126 ஆம் பிரிவின் கீழ் நாத்தாண்டிய பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி உரிய சட்டத்தின் அல்லது உரிய சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு 2015.09.25 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1933/40 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வடமேல் மாகாண முதலமைச்சரினால் பிரகடனப்படுத்தப்பட்ட, 2016.09.02 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1983 ஆம் இலக்க வர்த்தமானியில் IV (ஆ) ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட நாத்தாண்டிய பிரதேச சபையினால் ஏற்றுக் கொண்டுள்ள திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றி ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதியின் கீழ், மதிப்பீட்டு வரி அறவிடப்படாத பிரதேசம் ஒன்றில் குப்பைகளை ஒன்று சேர்க்கும் பணிக்காக கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு இடத்தில் அல்லது சுற்றாடலுக்காக இந்த அட்டவணையில் II ஆம் நிரலில் காட்டப் பட்டுள்ள கட்டணத்தினை 2019.07.01 ஆந் திகதி தொடக்கம் 2019.12.31 ஆந் திகதி வரை மாதாந்தம் விதிக்கப்பட வேண்டும் என்று நாத்தாண்டிய பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

### அட்டவணை

| I ஆம் நிரல் | II ஆம் நிரல் |
|---|---|
| 1. 2000 சதுர அடி அல்லது 2000 இற்கு குறைந்த ஏதாவதொரு வியாபார நிலையத்திற்காக மாதாந்தக் கட்டணம் | ரூ. 100.00 |
| 2. 2000 சதுர அடிக்கு மேற்பட்ட ஏதாவதொரு வியாபார நிலையத்திற்கான மாதாந்தக் கட்டணம் | ரூ. 200.00 |
| 3. 2000 சதுர அடி அல்லது 2000 சதுர அடிக்கு குறைந்த வீட்டிற்கான மாதாந்தக் கட்டணம் | ரூ. 50.00 |
| 4. 2000 சதுர அடிக்கு மேற்பட்ட வீட்டிற்கான மாதாந்தக் கட்டணம் | ரூ. 100.00 |

6 - 956

# நானாவித அறிவித்தல்கள்

## அக்குறணை பிரதேச சபை

*ஏனைய வருமானங்களை அறவிடுதல் - 2019*

*அக்குறணை பிரதேச சபை 2018.11.13 அன்று நடத்திய பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 5 : 1: 12 இன் கீழும், 2019.03.12 ஆம் திகதி நடத்திய கூட்டத்தில் இலக்கம் 5: 1: 18 இன் கீழும், 201904.05 ஆந் திகதி நடத்திய கூட்டத்தில் இலக்கம் 5 : 1: 2 இன் கீழும் பின்வரும் முன்மொழிவுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொது மக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.*

*ஐ. எம். இஸ்திஹார்,*
*தவிசாளர்,*
*அக்குறணை பிரதேச சபை,*
*அலவத்துகொட.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*அக்குறணை,*
*2019, மே 28.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, 2019 ஆம் ஆண்டுக்கென ஏனைய வருமானங்களை அறவீடு செய்வதற்கெனப் பிரதேச சபையினால் வழங்கப்படும் சேவைகளுக்காக 2018.10.11 ஆம் திகதி 5:1:12 ஆம் இலக்கத் தீர்மானத்திற்கமைய 2018.11.30 ஆம் திகதி கொண்ட 2100 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின்படி 2019 ஆம் ஆண்டுக்கென ஏனைய வருமானங்கள் அறவிடுதலின் கீழ் வெளியிடப்பட்ட தொடர் இலக்கம் 7 இல் இலக்கம் 3 உம், தொடர் இலக்கம் 18 இல் இலக்கம் 2 உம் பின்வரும் வகையில் திருத்தம் செய்யப்படுகின்றன.*

**தொடர் இலக்கம் 07 - அக்குறணை வாரச் சந்தைக் கட்டண அறவீடு (சதுர அடிக்கு)**

*3. 36 சதுர அடி வெற்றிடத்துக்கு ரூ. 250.00*

**தொடர் இலக்கம் 18 - நீர்க்குழாய்கள் பதிப்பதற்கெனப் பாதையைப் பழுதாக்கும் கட்டணம்**

*2. மண்பாதைகளைப் பழுதாக்குவதற்கென முழுத் தொகை ரூ. 500.00*

*06 - 936*

---

## யாழ்ப்பாணம் மாநகர சபை

*நீர்க்கட்டண அறவீடு - 2019*

**அட்டவணை - பகுதி IV**

*யாழ்ப்பாணம் மாநகரசபை நீர் வேலைப் பொறியியல் பிரிவினால் 2019 ஆம் வருடத்திற்கான நீர்க்கட்டண அறவீட்டு விபரம் இவ் அறிவித்தல் 01.06.2019 முதல் நடைமுறைக்கு வரும் (2019.05.07 பொதுக்கூட்டத் தீர்மானம்)*

| விபரம் | அலகு (1,000 லீற்) | கட்டணம் (வரிநீங்கலாக) | நிலையான சேவைக் கட்டணம் |
|---|---|---|---|
| வீட்டுப்பாவனை, மத ஸ்தாபனம் | 01 | 232.00 | 100.00 |
| | 02 | 282.00 | |
| | 03 | 332.00 | |
| | 04 | 382.00 | |
| | 05 | 432.00 | |
| விபரம் | அலகு (1,000 லீற்) | கட்டணம் (வரிநீங்கலாக) | நிலையான சேவைக் கட்டணம் |
| | 06-10 | 64.80 (அலகு ஒன்றிற்கு) | |
| | 11-20 | 86.40 ” | |
| | 21-30 | 108.00 ” | |
| | 30 க்கு மேல் | 129.60 ” | |
| போதனா வைத்தியசாலை | 01 | 448.00 | 100.00 |
| | 02 | 498.00 | |
| | 03 | 548.00 | |
| | 04 | 598.00 | |
| | 05 | 648.00 | |
| | 06-10 | 64.80 (அலகு ஒன்றிற்கு) | |
| | 11-20 | 86.40 ” | |
| | 21-30 | 108.00 ” | |
| | 30 க்கு மேல் | 129.60 ” | |
| அரச நிறுவனங்கள் | 01 | 328.00 | 100.00 |
| | 02 | 408.00 | |
| | 03 | 488.00 | |
| | 04 | 568.00 | |
| | 05 | 648.00 | |
| | 06-10 | 108.00 (அலகு ஒன்றிற்கு) | |
| | 11-20 | 129.60 | |
| | 21-30 | 151.20 | |
| | 30 க்கு மேல் | 172.80 | |
| விருந்தினர்விடுதிகள், சுற்றுலா ஹோட்டல்கள், தேநீர்சாலைகள், உணவகங்கள், தொழில் நிறுவனங்கள் | 01 | 464.00 | 100.00 |
| | 02 | 564.00 | |
| | 03 | 664.00 | |
| | 04 | 764.00 | |
| | 05 | 864.00 | |
| | 06-10 | 151.20 (அலகு ஒன்றிற்கு) | |
| | 11-20 | 172.80 | |
| | 21-30 | 194.40 | |
| | 30 க்கு மேல் | 216.00 | |

**பவுசர் மூலமான நீர் வழங்கல்**

| | | | |
|---|---|---|---|
| தாங்கிவைத்து குடிநீர் வழங்கல் | 1,000 லீற். | 1739.00 | 100.00 |
| தாங்கியின்றி குடிநீர் வழங்கல் | 1,000 லீற். | 750.00 | |
| நீர்விசிறுதல் | 1,000 லீற். | 750.00 | |

6 - 937

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.